நான் அதிகாலையில் விழிப்பேன்

I Will Awake the Dawn

Album 26 Song 6



Song 6 நான் அதிகாலையில் விழிப்பேன்

Psalm 108 – A song of steadfast praise and confidence in God. The psalmist declares he will awake the dawn with worship and trusts God for victory over enemies.

நான் அதிகாலையில் விழிப்பேன்
உம்மைப்பாடி கீர்த்தனம் பண்ணுவேன்
வீணையே சுரமண்டலமே
விழியுங்கள் நீங்கள் விழியுங்கள்

கர்த்தாவே ஜனங்களுக்குள்ளே
உம்மையே என்றும் துதிப்பேன்
ஜாதிகளுக்குள்ளே
உம்மையே போற்றிப் பாடுவேன்

உம் கிருபை வானங்களுக்கு மேலே
உம்மையே என்றும் துதிப்பேன்
உம் சத்தியம் மேகமண்டலம் எட்டுதே
உம்மையே போற்றிப்பாடுவேன்

உம் பிரியர் விடுவிக்கப்படும் பொழுது
உம்மையே என்றும் துதிப்பேன்
வலக்கரத்தினால் இரட்சிக்கும் போது
உம்மையே போற்றிப்பாடுவேன்

உமது பரிசுத்தத்தை விளம்பும் போது
உம்மையே என்றும் துதிப்பேன்

என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது
என் மகிமையும் உம்மைப் பாடும்

சீகேமைப் பங்கிட்டு
சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்துக்கொள்வேன்
கீலேயாத் மனாசே என்னுடையது
எப்பிராயீம் என் தலையின் பெலன்

யூதா எனது நியாயப்பிரமாணிகன்
மோவாபோ எனது பாத பாத்திரம்
ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிந்திடுவேன்
பெலிஸ்தியாவின் மேல் ஆர்ப்பரிப்பேன்

அரணான பட்டணத்திற்குள்ளே
என்னை நடத்திக்கொண்டு போகிறவர் யார்?
ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர் யார்?
எங்கள் சேனைகளின் கர்த்தர் நீரல்லவா?

எங்களுக்கு உமது உதவி போதுமே
மனுஷனுடைய உதவி வேண்டாம்
தேவனாலே பராக்கிரமஞ்செய்வோம்
கர்த்தரே சத்துருக்களை மிதித்துப் போடுவார்

